# கல்வியாளர்களின் கவனத்திற்கு

கோவிட்-19 தொற்றுநோய் பரவலைத் தடுப்பதற்காக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கைத் தொடர்ந்து தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் நடப்புக் கல்வி ஆண்டுத் தேர்வுகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன. இத்தேர்வுகள், அடுத்த கல்வி ஆண்டு தொடக்கம் ஆகியன பற்றி மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கு ஐயப்பாடுகள் எழுந்துள்ளன. இவை பற்றி விவாதித்து திட்டமிட பல்கலைக்கழக மானியக்குழு வல்லுநர் குழு ஒன்றை அமைத்துள்ளது. இக்குழுவின் அறிக்கையைப் பெற்று மைய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்துடன் கலந்தாலோசித்து உரிய வழிகாட்டுதல்களைப் பல்கலைக்கழகங்களுக்கும் கல்லூரிகளுக்கும் அளிக்க உள்ளதாக 17.4.2020 நாளிட்டக் கடிதத்தில் பல்கலைக்கழக மானியக்குழு தெரிவித்துள்ளது. தேர்வுகள், கல்வியாண்டு தொடக்கம், சேர்க்கை ஆகிவை குறித்துத் தேசிய அளவிலும், தமிழக உயர் கல்வித் துறை அளவிலும் மேற்கொள்ளப்பட்டுவரும் முயற்சிகள் மூலம் அனைத்து உயர் கல்வி நிறுவனங்களுக்கும் பொதுவான வழிகாட்டுதல்கள் வகுக்கப்படும் என எதிபார்க்கப்படுகிறது. மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்களின் நலன் கருதி வகுக்கப்படவுள்ள இந்த வழிகாட்டுதல்களைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் முனைப்புடன் செயல்படுத்தும். எனவே, இது தொடர்பாக மாணவர்கள் அச்சம் கொள்ள வேண்டாமெனத் தெரிவித்து மாணவர்கள் தங்களது நேரத்தைக் கல்விசார் வளர்ச்சிக்குப் பயன்படுத்த வேண்டும் என அறிவுறுத்துமாறு துறைத்தலைவர்களும் ஆசிரியர்களும் கனிவுடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

- துணைவேந்தர்